# கவிஞனின் காதல்

UNIVERSITY LIBRARY
3 1 MAY 1957
MADRAS

ஆசிரியர்

"தமிழ் ஒளி"

UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
MADURAI

முத்தமிழ் நிலையம்

75, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை—1.

முதற் பதிப்பு
2000 பிரதிகள்
நவம்பர் 1947

[சகல உரிமையும் முத்தமிழ் நிலையத்தாருடையது]

விலை அணா 12.

1192
031:1
H7

Published by

**M. Chakravarthi Nainar**

C.I.P. House, Madras Q.H.M.S. 459

Arutperunjothi Press, M.S. 396—*2000* G. T. Madras.

# பதிப்புரை

சோழ மன்னன் மகள் அமுதம், ஆடற்கலையில் தேர்ந்தவள். அவள் சேனாதிபதியின் மகனாகிய அழகனைக் — கவிஞனைக் — காதலிக்கிறாள். ஆனால் சேனாதிபதியும் கவிஞனும், நாடு கடத்தப்படுகின்றனர். தோணிநாட்டு மன்னனின் சூழ்ச்சி அது. அவனே அமுதத்தை மணக்கிறான். ஆனால் அவள் மன விகார மடைகிறாள்.

வெண்ணெயூரில் சேனாதிபதி மாறன், பள்ளிக் கூடம் வைத்து நடத்துகிறான். கவிஞன் அழகனின் உணர்ச்சிதரும் பாடல்கள் அந்தப் பள்ளியிலிருந்து பார் முழுவதும் பரவுகின்றன.

கவிஞன் தன் காதலியைத் தேடிப் புறப்பட்டுத் தோணிநாடு சேர்ந்து காதலியைக் கண்டு அவளுடைய பைத்தியத்தைப் போக்குகிறான். அதன்பின் நடைபெறும் சம்பவங்கள் மனத்தை உருக்கக் கூடியனவாயுள்ளன. அவைகளைக் கவிதைகளின் மூலம் அறிந்துகொள்ளுமாறு வாசகர்களுக்கு விட்டு விடுகின்றோம்.

கதை, மன்னர் காலத்துக் கதையாயிருந்தாலும், கருத்திலே மக்கள் காலத்துப் புதுமைகளைக் கொண்டு சொல்லோவியம் புனைந்திருக்கிறார் ஆசிரியர்.

உயிரும், உணர்ச்சியோட்டமும் காவிய முழுதும் கைகோத்துக் கொண்டு நடக்கின்றன. நீங்கள் கவிதைகளைப் படித்துச் சுவைத்துச் சொல்லுங்கள்.

இந்தச் சொல்லோவியமாகிய காவியத்தை எங்கள் முத்தமிழ் நிலையத்திற்கு அளித்ததற்காக ஆசிரியருக்கு நன்றி.

சென்னை,
17—11—'47. } முத்தமிழ் நிலையத்தார்.

# முன்னுரை

'கவிஞனின் காதல்' என்ற இந்தச் சிறு காவியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். இதில் நான் அடைந்த வெற்றியையும் தோல்வியையும் நீங்களே மதிப்பிட்டுக் கூறுங்கள்.

இதனை வெளியிட அன்புடன் ஒப்புக் கொண்ட முத்தமிழ் நிலையம் உரிமையாளர், திரு. மே. சக்கரவர்த்தி நயினர் அவர்கட்கு என் நன்றியும், வணக்கமும் உரியன.

சென்னை
24—11—'47 } "தமிழ் ஒளி"

# பிழை திருத்தம்

குறிப்பு :—காவியத்தை வாசிக்கத் தொடங்குவோர் முதலில் பிழைகளைத் திருத்தி வாசிக்கவும்.

| பக்கம் | பாட்டுவரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 5 | தேடறிய | தேடரிய |
| 2 | 21 | வளர்க்க | வளர்க |
| 10 | 15 | பிறிந்தாய் | பிறந்தாய் |
| 13 | 1 | முடிவுகொண்டான் | முடிவுகண்டான் |
| 14 | 4 | களை | கலை |
| 15 | 8 | சுழன்றேடிச் | சுழன்றுடிச் |
| 22 | 13 | வயற்றில் | வயிற்றில் |
| 25 | 3 | காமத்தைப் | நாமத்தைப் |
| 28 | 2 | புறித்தர்கும் | பறித்தற்கும் |
| 28 | 23 | தோளுமாந்தத் | தோளுமிந்தத் |
| 30 | 3 | யேற்றும் | யேற்று |
| 40 | 9 | கேட்குமுணம் | கேட்குமுனம் |

UNIVERSITY LIBRARY MADURAI

# கவிஞனின் காதல்

## இருவீட்டில் திருநாள்!

நெல்குலுங்கும் வயல்சூழும் வளசோ ணுட்டில்
நீதியுடன் அரசாண்ட ஆதி வேந்தன்
வல்லவர்கள் போற்றுமொரு பேர் படைத்தான்
மாச்சோழன் என்பவனின் மைந்தனுகத்
தொல்லுலகில் தோன்றியவன் இளங்கோச் சோழன்
சோதிமதி கதிர்போலே புகழைப் பெற்றுன்
இல்லறமும் அரசியலும் ஒன்ருய் ஏற்ருன்!
இரண்டிற்கும் துணைவி, அவன்வாழ்க்கை நல்லாள்!

வானமதி எனும்பேரும் எழிலுங் கொண்ட
வனிதையவள்; காதலிலே புறவி னம்போல்
தேனுமதன் சுவையும்போல் இளங்கோ வோடு
தித்திப்பாய் வாழ்க்கையினை நடத்தி வந்தாள்!
ஆனதினுல் அவளுக்கோர் பெண் குழந்தை
அழகாகப் பிறந்துவிட, 'அடடே! இன்பம்
நானடைந்தேன்' எனச் சொன்னுன் இளங்கோச்சோழன்!
நவிலாமல் வானமதி சுவைத்துப் பார்த்தாள்!

நாடறிய முரசமெலாம் முழங்க, அந்த
நன்னாளில் இன்னுமொரு திருநாள் அங்கே!
ஏடறிய வரலாற்றில் பொறிக்கத் தக்க
இசைபெற்றான் மாறனெனும் திருப்பேர் வாய்ந்தோன்
தேடறிய வெற்றியெலாம் தேடித் தந்தோன்
திறமிக்க படைத்தலைவன் அன்னோன் பெற்ற
ஈடற்ற துணைவியவள் ஆண் குழந்தை
ஈன்றுவிட்டாள்! இருவீட்டில் விழாநாள்அன்று!

இருகுடும்பம் ஒருநாளில் ஒரேநே ரத்தில்
இருசெல்வம் பெற்றதந்தச் சோணாட் டிற்கு
வருகின்ற நன்மையினைக் குறிப்ப தென்று
வாழ்த்துரைகள் இசைத்தார்கள் புலவ ரெல்லாம்!
இருங்கதிரும் மதியும்எதிர் எதிரே தோன்றும்
எழில்கண்டோம், என் றழகாய் வர்ணித்தார்கள்
விருந்தாக மாறிற்று வீடெல் லாமும்
வெள்ளம்போல் பூரித்தார் சோணாட் டார்கள்

தளபதியின் மைந்தனைநாம் காணுந் தோறும்
தரணியிலே நாம் என்றும் கண்டிராத
விளக்கத்தைக் காணுமோர் அற்புதந்தான்
விரைந்தேறும் நெஞ்சினிலே! 'அழகின் சிற்பம்
வளர்க்க'என நம்மிதழ்கள் அசையும்; அன்னோன்
வருங்காலம் நம்எதிரே கற்ப னைக்குக்
கிளர்ச்சிசெயும்! ஈதென்ன புதுமை! அன்னோன்
கீர்த்திபெற வளரட்டும் பார்க்கலாம்நாம்!

மன்னன்மகள் வளர்கின்ருள் புதுமை யெண்ணம்
வளர்வதுபோல்! கவிஞர்களின் கற்ப னேக்குப்
பொன்னள்ளித் தரும்அவளின் மேனி தன்னேப்
பூமியிலே எதற்கீடு சொல்வ தையா!
கன்னலது வளர்கிறது; வளர்ந்துவிட்டால்
கதைநடக்கும் அதையறிந்து மகிழலாம் நாம்.
என்ன அவள் பேரென்ருல்; எண்ண எண்ண
இனிக்கின்ற அமுதம் அதை யாருண்பாரோ!

படைத்தலேவன் மகன்பேரைச் சொல்லா விட்டால்
பதைப்புறுதல் கதை கேட்கும் உங்களுக்கே
உடைத்தான குணமகிமை! அதற்காகத்தான்
உரைக்கின்றேன் முன்னேயே; அழகன் என்னும்
கிடைத்தற்கு மிக்குரிய பேரைப் பெற்றுக்
கிழக்கெழுந்த கதிர்போலே வளர்ந்துவந்தான்
அடைகின்ற இன்பத்துள் இளஞ்சிருரின்
அழகுதனேக் காண்பதுவும் பெரிய இன்பம்!

## அழகனும் அமுதமும்

படைத்தலைவன் இளமகனும் அமுதம் என்னும்
பைந்தொடியும் இளமையிலே உறவு பெற்றார்
விடைகேட்டா சிறுவரெலாம் கூடுகின்றார்?
விளையாட்டில் அவர்தூய நட்பு சேரும்
எடைபோட்டால் அதற்கீடு புவியில் ஏது?
ஏமாற்று மனிதர்களின் கறுப்பு நெஞ்சு,
தடைபோடும் மதஎண்ணம், பிரிவு, சூழ்ச்சி
தலைகாட்டல் இல்லையது கலையின் வீடு!

மண்ணாலே சிறுவீடு சமைத்தல், பொம்மை
மரக்குதிரை இவற்றிற்கும் உயிர் கொடுத்தல்
கண்மூடிக் கணத்தினிலே நூறு நூறு
காட்சிகளைத் தோற்றுவித்தல், காதலர் போல்
எண்ணியொரு குடித்தனத்தை நடத்தல், ஆஆ!
என்னென்ன அற்புதங்கள் செய்வார்! இந்த
மண்ணுலகில் சிறுவருளங் கொண்டோ ராக
மாறிவிடில் மனிதரெலாம் புனித ராவார்.

தீராத விளையாட்டுப் பிள்ளை யாகத்
திரிகின்றான் அப்பையன் அழகன்; அந்த
ஆரமுதம் அவனோடு சேர்ந்து கொண்டாள்.
அவர் நுழையா இடமில்லை அரண்மனைக்குள்
பாராத தெல்லாமும் பார்த்தும் ஏதோ
பாரதம் போல் கதையளந்தும், என்னெல்லாமோ
ஊராரின் பேச்சுகளைச் சொல்லிப் பார்த்தும்
உயிர்பெற்ற நாடகங்கள் நடத்தி வந்தார்

தானாக ஏதேதோ அந்தப் பையன்
தலையசைத்துப் பாடிடுவான்; அமுதம் வந்து
'நானாக அதற்கேற்ற நடனஞ் செய்வேன்
நன்றாகப் பார்'என்றே ஆடிக் காட்டித்
தேனாகப் பேசிடுவாள்; யார் கண்ணிற்கும்
தெரியாமல் நடப்பதுவாய் அவர்கள் எண்ணம்.
ஆனால் அவ் விருவருடைச் சரித்திரங்கள்
அன்றாடம் அரண் மனையில் அம்பலந்தான்!

## பள்ளிப் பருவத்திலே!

இருவருமே இயற்கையிலே கலையார் வத்தில்
ஈடுபடுந் தன்மையினை அவர்கள் பெற்ருேர்
கருத்தினிலே கொண்டதினுல்—வேந்தன் செல்வி
கல்வியுடன் நடனமுமே கற்ப தற்குப்
பொருத்தமுறும் பள்ளியிலே சேர்க்கப் பட்டாள்
போய்ப் படித்தான் அழகனுமே; எண்ணெழுத்தும்
திருத்தமுறக் கற்ருர்கள் கலைக் கூடத்தும்
தீராத விளையாட்டுச் சிறுவர் அன்னர்.

கற்கையிலே கலைவளரும் அதனே டந்தக்
கண்மணிகள் கருத்தெழிலும் வளரும்; அன்பு
நற்கல்வி இவை சேர்ந்த இளமைக் காலம்
நல்லுறவாய் வளரும்இதற் கிடையில் வாய்த்த
பொற்பாலம் போன்ற அவர்வயதும் ஆண்டும்
பொலிவுகொளும் மேனியுமே வளரும்; அந்தப்
பிற்காலம் பருவமெனும் அழகுக் காலம்
பேரெழில்சேர் மலர்போன்று மலரும் நாளை!

நடனத்தில் தேர்ந்துவிட்டாள் அமுதம்; மாறன்
நன்மகனே கவியெழுதுந் திறமை பெற்ருன்
தடந்தோளான் முகத்தினிலே அரும்பும் மீசை;
தையலுக்கு மேனியெலாம் வான வில்லாம்!
நடக்கின்ற இயற்கைவிதி அவரீடத்தும்
நடக்காமற் போய்விடுமா ? காதல் என்னும்
படந்தீட்டும் ஓவியர்கள் அவர்கள் கண்கள்;
படைக்கின்ற வண்ணம் அவர்கருத்தும் அன்பும்!

## கூட்டிலே கிள்ளை

ஒருநாளில் பிறந்தார்கள் அரண் மனைக்குள்
ஒன்ருக விளையாடித் திரிந்திட் டார்கள்
அருங்கல்விக் கூடத்தும் ஒரு வகுப்பில்
அவ்வாறே ஒன்ருகப் படித்திட் டார்கள்
கருத்தொன்றி விட்டதினல் காத லுக்குக்
கைகொடுத்து விட்டார்கள்; அந்த நேரம்
பருவம் வந்துவிட, அவரைப் பிரிப்பதற்குப்
பலர் கூடிச் சட்டத்தை ஆக்கினுர்கள்

ஓடுகின்ற வெள்ளத்தை மறித்தாற்போலும்
உயர்ந்துவ்ளர் மரநுனியைத் தறித்தாற் போலும்
பாடுகின்ற தமிழ்ப்பாட்டைத் தடுத்தாற் போலும்
பழந்தமிழைச் சிலரிடையே அடைத்தாற்போலும்,
கூடுகின்ற காதலரைப் பழக்கம் என்னும்
கூர்வாளால் மன்னர்குலம் வெட்டிப் போட
நாடுகின்ற தீமையினை நல்ல தென்று
நச்சுப்பல் கொண்டோர்கள் சொல்லி விட்டார்

ஆசிரியர், உறவினர்கள், அமைச்சர் ஆய
அத்தனை பேரும்அதனை ஆதரித்தார்
மாசில்லா இளமைமனம் எங்கே? இந்த
மடயர்களின் கெடுமதிதான் எங்கே? சீச்சீ !
ஊசிமுனை அளவேனும் அவர்களுக்கே
உண்மையொளி தெரிவதில்லை; இவர்கள் தாமே
ஆசிசொல வந்தார்கள் பருவம் வாய்ந்த
அமுதத்திற் கேதேதோ போதித் தார்கள்.

ஆடவரைப் பார்த்திடுதல் முன்னைப் போலே
ஆடியுமே திரிந்திடுதல் கூடா தென்று
மூடமதி புகட்டினராம் அரண்மனைக்குள் !
முகம் வியர்க்கும் கண்ணிரண்டும் சோரும், அந்தப்
பாடல்வல்லான் இடத்தினிலே கருத்து தோயும்
பாவையந்த அமுதத்தின் நெஞ்சு நோகும்
ஏடவிழ்த்து மலர்கின்ற மலரை, வானில்
எழில்செய்யும் பருவநிலா தன்னை, யாரும்

பார்க்காமல் இருப்பதில்லை பெண்கள் மட்டும்
பருவத்தை எய்திவிடின் பார்த்தல் தீதாம்
யார்க்கிந்த உபதேசம்? இளைஞருக்கா?
அதுவும் அந்தக் கலைஞர்க்கா? காதலர்க்கா?
ஊர்க்காவல் என்செய்யும்? அரண்மனைக்குள்
உறுங்காவல் என்செய்யும்? மன்னன்கொள்ளும்
போர்க்காவல் என்செய்யும்? அவர்கள் நெஞ்சில்
பொங்கிவரும் உணர்வுபெருங் கடலே யன்றோ!

## பிரிவு வளர்ந்தது

பள்ளியினை இருவருமே விட்டு நீங்கிப்
பலநாட்கள் ஆயிற்று! மகிழ்வு பொங்க
துள்ளியுமே விளையாடி இருந்த தெங்கே?
தொட்டிழுத்துக் கனிமுத்தம் இட்ட தெங்கே?
கள்ளருந்திக் களிப்பவர்போல் களித்த தெங்கே?
கண்ணோடு கண்சேர்த்த காட்சி யெங்கே?
முள்ளிட்ட வேலியினைப் போட்டு விட்டார்
முழுமூடர் அவர்செயல்கள் விழலா கட்டும்!

போர்த்துறையில் பயிற்சிதர அழகனுக்குப்
பொழுதெல்லாம் அவன் தந்தை முயன்று பார்த்தும்,
நீர்த்துறையில் காகிதத்தால் கப்பல் செய்து
நெடுகவிடும் பிள்ளையென அழகன் செய்யும்
தேர்வில்லாச் செயல் கண்டு, படைநடத்தும்
திறமையுடை ஒருவனுக்குப் பிள்ளையாகப்
பார்மீது நீபிறிந்தாய் வீணே, உன்னால்
படைத்தலைவன் புகழ்வளர்தல் இல்லை யென்றான்.

போர்த்தொழிலின் பயிற்சியினை வெறுத்ததன்றிப்
பொழுதையுமே அவன் வெறுக்கத் தொடங்கிவிட்டான்
கார்காணு தேங்குகிற பயிரைப் போலே
காதலியைக் காணுமல் அழகனுக்கு
நீர்காணு நாவென்ன வரட்சி தோன்றி
நெடுவேட்கை மேலிட்டு நாளும் நாளும்
சோர்வதன்றி வேறறியான், கண்டு பேசத்
தோதெண்ணித் தடையெண்ணிச் சித்தம் சோர்வான்

## திருநாள் வந்தது

அவள் அங்கே தென்றலினை வெறுப்பாள், தோன்றும்
அணிநிலவு தனைக்கண்டு கொதித்துப் போவாள்
சுவர்வைத்து மனிதர்களின் சுதந்திரத்தைத்
தொலைக்கின்றார் ஈதென்ன கொடுமை அம்மா!
இவர்கள்நிலை இவ்வாறு யிருக்கும் போதில்
எதிர்பாரா விதமாகத் திருநாள் ஒன்று
கவலையினை நீக்கிவிட ஓடி வந்து
காதலர்கள் எதிர்நின்று கைநீட்டிற்றே!

ஆண்டுதொறும் தவறாமல் சோழ நாட்டில்
அழகாக நிகழ்ந்துவரும் கலை விழாவில்
வேண்டுமட்டும் பங்குகொளக் கலைஞ ருக்கு
விருப்பம்போல் உரிமைதரும் சட்டமொன்றை
மாண்டுவிட்ட ஆதிமன்னன் செய்து வைத்தான்
மாற்றஅதை மாற்றலரும் ஒப்பார் என்னில்
ஈண்டவனின் மகன் அதனை மாற்றுவானா?
இளங்கோவோ கலைத்தொண்டில் ஆர்வங் கொண்டோன்

## அழகனின் சூழ்ச்சி

அழகன் மிகச் சிந்தித்தான் முடிவுகொண்டான்
அரண்மனையில் மிகமுயன்று தோழிப் பெண்ணின்
பழக்கத்தைப் பெற்றவளின் மூல மாகப்
பலநாளாய் அடக்கிவைத்த ஆவல் மீற
எழுதியொரு கடிதத்தைக் கொடுத் தனுப்பி
இதயத்தின் சுமைசற்றே இறக்கி வைத்தான்
ஒழுகு தேன்மொழி அமுதம் கடிதங்கண்டாள்
உலகத்திற் புதுநாளைக் காணு கின்றாள்.

காதலனின் திருமுகமும், சூழ்ச்சி கண்ட
கற்பனையும் அவள்உள்ளக் கடலுக் குள்ளே
மோதவிடும் உணர்வலையை. கவிஞ னுக்கு
மூதுலகில் காதலியாய் வாய்ப்ப தென்னில்
மாதவங்கள் செய்திருக்க வேண்டு மன்றோ !
மண்ணினிலே பெண்களெலாம் பொருளுக்காகத்
தீதுதரும் சொத்துக்காய்—மன்னர் தம்மைச்
செல்வர்தமை விரும்புவரே பேதைப் பெண்கள் !

இளங்கவிஞன் என்னுயிரில் இசை யளிப்போன்
எதிரிருந்து பாட, நான் ஆடுகின்ற
வளங்காணும் நாளைக்கு வையம் அந்த
வாழ்நாளைக் கூட்டுவிக்கும் கலை விழாவைக்
குளங்காணும் பறவை யென வரவேற்கின்றேன்
கொண்டதொரு சூழ்ச்சியிதைப் போற்று கின்றேன்
உளங்கொள்ளும் ஆர்வத்தைக் கவிதை யாக்கி
உயிர்அள்ளும் இசைமீட்டும் காதலன்றன்

கருத்துரைத்த கடிதத்தைப் படித்து விட்டுக்
கையேந்தித் தென்றலிலே வணங்கு கின்ற
திருக்குறிப்பை—மலர்விரிவை—வெற்றிச் சங்கம்
திசைநோக்கி முழங்குவதை—கலை விழாவின்
வருகையினைக்—கொண்டாடுங் களியாட்டத்தை.
வரப்போகும் காதலனை வரவேற் கின்ற
பெருமையினை—ஒவ்வொன்றாய் ஆடிப் பார்த்தாள்
பெண்ணரசி அமுதம்அவள் ஆர்வ வண்டு!

விண்மீன்கள், பசிகொண்டோர் கண்க ளென்ன
விரிவானில் துடிக்கின்ற இரவில், இந்தப்
பெண்ணிங்கே அரண்மனையில் கற்பனைக்குள்
பெருங்கனவு சமைக்கின்றாள்; அங்கே அந்த
நண்பனுமே உயிர்க்கவிதை எழுது கின்றான்
நாளைக்கு நாட்டியத்திற் கேற்ற பாடல்
நண்ணுகின்ற விழாவினிலே பாடு தற்கு
நள்ளிரவைச் சிந்தனையால் தள்ளுகின்றான்

புத்துலகம் பிறந்ததென ஒளியை வார்த்துப்
புன்னிருட்டைக் கீழ்தள்ளி மேலெ ழுந்தே
எத்திசையும் கைவிரித்தான் கதிரோன் அன்னேன்
எதிரினிலே சோணுடு பொன்னு டாக
முத்துமலர்ப் பந்தலுடன் விளங்கக் கண்டும்
முரசொலியும் சங்கொலியும் முழங்கக் கேட்டும்
'தத்தத்தோம்' எனக்கடலில் தாளங் கொட்டித்
'தகதகெனச்' சுழன்றேடிச் செல்கின்றனே

## கலை விழா

காலைவந்து விட்டவுடன் சோழ நாட்டில்
கலைவிழாவும் வந்ததுவாம்; புலவ ரெல்லாம்
மாலையினைப் புனைகின்றார் மன்ன ருக்கு
மண்ணுலகில் நல்லாட்சி நடப்பதற்கு
வேலை யிலாப் புலவர்களே மன்னருக்கு
விருதிசைப்பார்; நம்கவிஞன் அழகன் இன்பச்
சோலைமலர்க் குலம்தந்த காத லிக்குச்
சுடர் கவிதை தொடுக்கின்றான் அடுக்கடுக்காய்

படிவிட்டுக் கீழிறங்கும் போதும், முல்லைப்
பந்தலிலே மலர்கொய்யும் போதும், மின்னல்
கொடிபோன்ற அமுதமவள் நாட்டி யத்தின்
கோணத்தில் நடைபோட்டு, மயிலைப் போலே
அடியூன்றிச், சாயலிலே அழகு காட்டி
ஆனந்தப் பள்ளிசைத்துத் துள்ளி யோடிக்
குடிகொண்ட மகிழ்ச்சியிலே வசந்த காலக்
குயிலாக மாறி விட்டாள் பறக்கின்றாளே.

தமிழ்வளர்க்கும் கழகங்கள் ஆர்வ முற்றுத்
தண்கடல்போல் எண்டிசையும் முழங்க ஆங்கே
இமிழ்க்குழுனே பணிசெய்யச் சித்த மாகும்
இளைஞரெலாம் விளைபயிர்போல் குலுங்க, இன்ப
அமிழ்துண்ணுஞ் சிறுவரென நாட்டு மக்கள்
அனைவருமே ஒருகுடும்ப உறவு கொள்ள
திமில்கொண்ட ஒட்டகம்போல் தலையைத் தூக்கித்
திசை நாட்டார் காணுகிறார் திருவிழாவை!

பகற்போது செல்கிறது மாலை தன்னில்
பளிங்காலே ஆனதொரு மண்ட பத்தில்
புகழ்பெற்ற கோச்சோழன் திருமுன்னே நற்
புலவர்களின் ஞானத்துக் கலை விழாவை
நிகழ்விக்க ஏற்பாடு நடக்கும் போது
நேரிலிரு விண்ணப்ப ஏடு கண்டார்
இகழ்வாரா ?—அரசன் மகள் நாட்டியத்தை
இயற்றுவிக்கப் போகின்றான் மகிழ்ச்சி தானே!

அரசனிந்த விண்ணப்பங் கண்டான்; ஆமாம்
அருமைமிகும் நம் மகளின் கலையார்வத்தை
ஒருதுளியும் தடுப்பதுநாம் உசிதமில்லை
உண்மையிலே தடுப்பதற்கும் சட்ட மில்லை
பெருமையிதில் எனக்குண்டு; எனினும் மற்றோர்
பேர் விளங்கா விண்ணப்பம் புரியவில்லை
'திரு,த்தொண்டன்' எனும்பேரைப் பார்த்தால், பக்தர்
திருக்குழுவைச் சேர்ந்தவன்என் றெண்ணலாம் நாம்

'கவிஞன்'எனத் துணிந்தெழுதி யுள்ளான், "ஆடற்
கலையரங்கில் பாடுதற்குப் புதிய பாடல்
புவிபோற்றும் தமிழ்ப்பாடல் எழுதி யுள்ளேன்
புலவர்முன் பாடுகிறேன்" என்றே, என்றன்
செவியினிலே அறைவதுபோல் எழுதி யுள்ளான்
தெரிகிறது நேரில்வரின்—விண்ணப் பத்தைக்
கவனித்தோம் வருக!" என மன்னன் ஆணை
கழறியதும், முழங்கிற்று முரசம் சேதி !

மாணிக்க வரிப்படலம் வானை மூட
வடிவழகு மாலையதும் வந்த தாமே
காணிக்கை கொண்டுவந்தார் கலை யரங்கில்
கலைஞரெலாம்; அரசனங்கே ஆதனத்தில்
தோணிநாட் டரசனுடன் அமர்ந் திருந்தான்
சோணாட்டின் 'கலை விழா' காணுதற்கு
ஆணிப்பொன் னுடையுடன் அந்த வேந்தன்
அங்குவந்தே அமர்ந்திருந்தான் பகட்டுக் காரன்

தளபதியும் அமைச்சர்களும் ஒருபு றத்தில்
தாங்காத மகிழ்ச்சியுடன் நாட்டு மக்கள்
வளையம்போல் நின்றார் மற் றோர்புறத்தில்
"வருககலைத் தொண்டர்" என ஆணைதோன்ற
இளவரசி ஆடலரங் கேறி நின்றே
எல்லோர்க்கும் தலைதாழ்த்தி வணக்கஞ் செய்தாள்
விளங்குபுகழ் அழகனுமே அப்போ தங்கே
விரைவாக நடந்துவந்து பாடல் வல்லான்

வீற்றிருக்கத் தகுமிடத்தின் அருகே சென்று
மிகத்தாழ்மையுடன் வணங்கி அமர்ந்துகொண்டான்
ஏற்றியிரு விழிகளையும் அரசன் பார்த்தான்
"என்மகனு" எனமாறன் திகைத்துப் பின்னர்
சீற்றமிக நேர்ந்திடுமோ மன்னற் கென்று
சிந்தையிலே அயர்வுற்றான்; கலை யரங்கு
தோற்றுவா யாகிடவும், இசையைக் கூட்டிச்
சொல்லினவே கருவியெலாம் பண்ணி னோடு

## கவிஞனின் பாடலும் காதலியின் ஆடலும்

'போற்றி'யெனப் பாவிசைத்தே தமிழைப் போற்றிப்
புத்துலகை ஏழைகளைப் போற்றி செய்து
வீற்றிருக்கும் கவிஞர்களைப் புலவர் தம்மை
வியன் தமிழைப் பெண்ணமதனைப் போற்றிசெய்து
நாற்றிசையும் மயங்கஅவன் காதற் பாட்டை
நாவினிக்கப் பாடுகிறான்; மதியைப் போலே
வீற்றிருந்து மலர்போலே கையை ஏந்தி
மின்னுமயில் போல் அமுதம் ஆடுகின்றாள்.

நிலாவெழுந்த இரவினிலே காத லாலே
நித்திரையே யில்லாமல் துடித் தொருத்தி
உலாவுகிற நேரத்தில் காதலன் றன்
உரு தோன்ற அதைக்கட்டி அணையப் போக
இலாதுமறைந் தேவிடவும், ஊன்றிப் பார்க்க
இவள்நிழலே அவ்வாறு தோற்றங் காட்டிச்
சொலாதெதுவும் மௌனமாய் நிற்க, அந்தத்
தோகையவள் ஏங்குகிறாள்; இந்த வண்ணம்

பாடல்தருங் கருத்திற்குப் பொருத்த மாகப்
பைங்தொடியாள் சிந்தைமகிழ்ந் தாடுகின்ருள்
ஆடல்தரும் சுவை—அந்தப் பாடல்வல்லான்
அளிக்கின்ற இசையினிமை அனைத்தும் அங்கே
கூடியதாம் உணர்வினிலே ஒன்ருய்; வேந்தன்
குலக்கொம்பு—காதல் தரும் ஆவேசத்தால்
ஆடிக்கொண் டிருக்கையிலே காதலன்றன்
அருகினிலே சென்றவன்மேல் வீழ்ந்துவிட்டாள்

கனவுலகில் இருந்தரசன் மீண்டதைப் போல்
கதிகலங்கித் திடுக்கிட்டான் மக்களெல்லாம்
நனவுலகில் மீண்டார்கள் தளபதிக்கு
நடுக்கத்தால் உடலாடிப் போக, மிக்க
சினத்துடனே மன்னனுமே கூச்சலிட்டான்
'திடுங்'கென்றே இசைப்பண்கள் அறுந்து போக
புனல்குளித்துக் கிடப்பவன்போல் கிடந்த அந்தப்
புதுக்கவிஞன் அழகனுமே நிலைகுலைந்தான்

கையெடுத்தே அமுதமவள் விலகி, மிக்க
கலக்கமுடன் நின்றுவிட்டாள் தலைகவிழ்ந்து;
துய்ய அவள் அழகுதனைக் காமக் கண்ணுல்
சுவைத்திருந்த தோணி மன்னன் ஏளனத்தால்
கையாண்டிச் செய்பவன்போல் மன்றைப் பார்த்தான்
"நல்லதுகாண் தளபதியே உமது மைந்தன்
செய்யாத காரியத்தைச் செய்துவிட்ட
தீரன்என நினைத்தீரோ? அவனை இக்கால்

# அரசனின் ஆத்திரம்

'திருத்தொண்டன்' எனும்பேரில் இங்கே வந்து
'திருடன்'எனச் சொல்வதிலே என்ன ஐயம்?
பெரும்புலவர் வழிவந்த கவிஞரெல்லாம்
பெருநாட்டின் மதிப்பெண்ணி யிருக்கும்போது
ஒருபையன் இவன் என்ன சங்ககால
உயர்கவிஞன் என்றெண்ணி இறுமாந் தானோ?
பருவத்தால் மதியிழந்த என்மகட்குப்
பாடலிசைத் தெனையிங்கே அவமதித்தான்.

பிறநாட்டு வேந்தரெனை மதிப்ப தற்கும்
பேரரசின் சட்டதிட்டம் நிலைப்ப தற்கும்
உறவுகொண்ட தளபதியின் மைந்தனே, என்
உயர்வுக்கு மாவிழிவைச் செய்து விட்டான்
"குறத்தனத்தில் கைதேர்ந்தாய் என் வயற்றில்
கொள்ளியிடப் பிறந்தவளே! அமுதம்என்னும்
சிறப்பான பெயர்பெற்று நஞ்சைக் கக்கிச்
சீறுகின்ற பாம்பே, என் முன்னிற்காதே!"

தளபதியைத் தன்மகனை மாறி மாறித்
தமிழ்ச் சோழன் சீறுகிறான் அந்நேரத்தில்,
"உளக்கோபந் தணித்திடுவீர் மன்னர் கோவே!
உம்நாட்டுக் கவிஞரிலே உயர்ந்தோ னாக
வளநாடு எனைப்போற்றும் காலம், நாளை
வருவதனை நீரறிய மாட்டீர், உண்மை!
தளர்வடைதல் வேண்டாமே நடந்த தென்ன?
தமிழ்க்குடியே மூழ்கிவிடும் ஆபத் தாமோ?

எதற்காக அமுதத்தை இழிவு சொல்லி
இவ்வாறு சீறுகிறீர்? கலைவி ளக்கின்
சுதந்தரத்தை நாம்கட்டுப் படுத்த லாமோ?
தூயதமிழ்க் கவிஞன்மேல், கலைய ணங்கின்
இதயத்தில் அன்பு! பெருகும் இயற்கை!
இருவருமே ஒன்றாகத் திரிந்த போதில்
இதழ்கனிய நான் முத்தமிட்ட தெங்கே?
என் மடியில் அவள் படுத்துக் கிடந்த துண்டே?

குற்றமெனத் தமிழ்மரபில் கொள்வா ருண்டோ?
கோவேந்தே சினம் விடுத்து மன்னிப்பீரே!
நற்றமிழ மக்களே கலை விழாவில்
நலிவேதும் நிகழ்ந்ததென எண்ணிடாதீர்
ஒற்றுமையைக் கண்டீர்கள்—உங்கள் வாழ்வில்
ஒவ்வொருவ ரிடத்தேயும் கடைப் பிடிக்க
முற்றுமிதை முயல்வீரேல் கலக மில்லை
மூளுகின்ற வேற்றுமைகள் தூளாய்ப் போகும்

## தோணி நாட்டானின் பொருமை

என்றுசொலித் தலைவணங்கி அழகன் நின்றான்
எதிரிருந்த தோணிமன்னன் பொருமை கொண்டு
நன்றுநன்று! தளபதியார் மைந்தனுக்கு
நரிக்குரிமை காட்டினிலே கொடுத்ததைப்போல்
இன்றுதரும் அரசிங்கே நான் கண்டிட்டேன்
ஈதென்ன புதுமை! யெனச் சொல்ல "என்னைத்
தொன்றுதொட்டுப் பழிவாங்கக் காத்திருந்த
சூழ்ச்சிதான்" எனச்சொன்னான் இளங்கோச்சோழன்

உடல்வியர்க்க தளபதியும் தோணி நாட்டின்
ஒந்தியினை நோக்கியுமே சொல்வான் "இந்தக்
கடல்சூழும் உலகத்தே உமக்கு மட்டும்
கண்வேறு! மனம்வேறு! அறிவு வேறு!
தொடமுடியா இடத்தினிலே துலங்குகின்ற
தூயபரம் பொருநீவிர்! போமையா போம்!
கெடப் பலவும், பேசாதீர் எங்களுக்குள்
கேடிருக்கும் நட்பிருக்கும் தலையிடாதீர்!

யாமெல்லாம் ஒருகுடும்பம் கலேயே எங்கள்
அரசர்குடி மதிக்கின்ற நிதியம்! சும்மா
காமத்தைப் பெரிதாக வைத்துக் கொண்டு
நடுத்தெருவில் கலேஞர்களேத் தவிக்க விட்டுக்
காமத்தைக் கலேயென்று கருதுகின்ற
கசடர்வழி வந்தவர்யாம் அல்லேம் தூரச்
சீமைக்கும் சோணுட்டின் புகழ் விளக்குத்
தொல்லுலகில் எங்கேயும் தெரியும்'' என்ருன்

அடுத்தகணம் தன்மகனின் அருகே சென்று
அவன கண்ணில் மின்னலெழ அறைந்தான் இங்கே
எடுத்தடிவைக் காதேபோ' என்று சொல்லி
இரண்டடியில் தளபதியும் தாண்டிச் சென்ருன்
கொடுத்தஅடி ஏற்றவனுய் அழகன், கண்ணேக்
குலக்கொடியின் பால்அனுப்பி விடைபெற்றிட்டான்
தொடுத்தஇரு புதுமலர்கள் வாட இந்தத்
துடுக்கிழைத்த முடிமன்னர் குடியேதீமை

அவன்பிரிந்தான் காதலியும் பிரிந்து சென்ருள்
அப்போதில் காமுகனும் தோணி நாட்டான்
சிவந்துவிடக் கண்ணிரண்டும் செப்பு கின்ருன்
“சிறுவரிவர் எனேயிங்கே அவ மதித்தார்
அவர்களேநீர் இவ்வரசில் அநும தித்தீர்
அப்பையல் அரசகுடிப் பெருமைதன்னே
சவப்பெட்டி தனிலிட்டு மூடல் உண்மை
தளபதிக்குக் காட்டுகிறேன் என்கை வன்மை

என்றவனும் சொல்லியுமே நின்றான் மக்கள்
எல்லோரும் மௌனமாய்க் கலைந்து சென்றார்
"தென்றிசைத்தார் மன்னவனே வருக! கோபம்
தீர்ந்திடுக!" என்சோழன் சொல்லி, ஓங்கும்
குன்றுடலைக் கொண்டவனும் தோணி நாட்டுக்
கோமானை அரண்மனைக்கே அழைத்துச் சென்றான்
ஒன்றுக்குப் பத்தாகக் காம எண்ணம்
ஓடிவரத் தோணிமன்னன் சென்றான் அங்கே

## தோணி நாட்டான் சூழ்ச்சி

கலைவிழா முடிந்துபல திங்கள் சென்று
காதலரைப் பிரிவாலே வாட்டும் போது
கொலைநெஞ்சுக் காரனவன் தோணி மன்னன்
குலக்கொடியை அழுதத்தை அடைவ தற்கும்
கிலைகுலைத்துத் தளபதியை வீழ்த்து தற்கும்
நெஞ்சினிலே சூழ்ச்சியினை வகுத்தே ஓர்நாள்
புலைச்செயலைத் தொடங்கிவிட்டான் சோணாட் டிற்குப்
போக்கினன் தூதுவனை ஓலை தந்து

தோணிநாட்டின் தூதுவனோ பறந்து சென்று
சோழர்வள நாடடைந்து, மன்றம் புக்குத்
"தாணிழலைப் பணிகின்றேன்" என்று கூறித்
தான்வந்த[விதங்கூறி "ஓலை தன்னைக்
காணிர்"எனச் சமர்ப்பித்தான் சோழன் முன்னா
கண்டதுமே;ஆவலுடன்;படித்துப் பார்த்தே
"வீணில்நான் வஞ்சகனை நம்பி விட்டேன்
வேடத்தால் படைத்தலைவன் மற்றென் வைரி

என்பகைவர் தம்மோடு தொடர்பு கொண்டே
என்னரசைப் புறித்தற்கும் அமுதந் தன்னைச்
சின்னவனும் அவன்மகனே அடைவதற்கும்
செய்தானு சதி? அடடே, மாறு! உன்னை
இன்னுமொரு நொடியிங்கே வைக்க மாட்டேன்
இப்போதே தொலைத்திடுவேன் தப்பிச் செல்வாய்
புன்மைமிகும் நீ, இந்தச் சோழ நாட்டில்
பொதுவாழ்வு வாழ்தற்குத் தகுதி யற்ருய்."

'தளபதியை அழைத்திங்கே வருக' என்று
தார்ச்சோழன் ஆணையிட்டான், ஏவ லாளன்
'மளமள'வென் றேடியுமே அழைத்து வந்தான்
"மாபெரியீர் இன்று முதல் இந்தநாட்டுக்
குளத்தினிலேநீர், தண்ணீர் குடிக்க வேண்டாம்
குடியேறிப் போய்விடுவீர் வேற்றூருக்கு!
உளவிருந்த நெஞ்சத்தோய்! உமது மைந்தன்
உயர்கவிஞர் அவரோடும் ஓடிப் போவீர்

நாளையிளங் கதிர்வருமுன் சோழ நாட்டின்
நன்னீதி எல்லையினின் றகன்று செல்வீர்
ஊளையிட வேண்டாம் இனி இங்கிருந்தே
ஒருநொடியும் தாமதித்தால் என் கோபத்தீ
மூளும் அதைத் தடுக்கப் பின்யார் வந்தாலும்
முடியாது முன்னேயே செல்வீர்!" என்றுன்
"வாளும்என் தோளுமாந்தத் தமிழ் நிலத்தே
வஞ்சத்தில் சூழ்ச்சியினில் பிற நாட்டாரின்

அடிமையினிற் சிக்காது சொன்னேன் மாற்ருர்
அடிபணிவோன் நானல்லன் மானம் போகும்
படிநடக்கப் பொறுத்திருக்க மாறன் ஒப்பான்
பைந்தமிழ நாட்டிற்குத் துரோகஞ் செய்யும்
குடிப்பிறந்தோன் நானல்லன் தோணி நாட்டான்
கோள்மூட்ட நீள்உறவை நசுக்கி விட்டீர்
அடிபெயர்த்துவிட்டேன் நான் இவ்வூர் விட்டே!
ஆட்சியினை என்கையில் 'இந்தா' என்று

தந்திடினும் இனியிங்கே இருப்ப தற்குத்
தமிழ்நெஞ்சம் ஒப்பாது ஆனல் ஒன்று
இந்தவுயிர் மூடியுமுன்னே என்மேல் வந்த
இரும்பழியைப் பொய்க்கோளைத் துடைத்தே உண்மை
செந்தமிழர் அறியும்வணம் செய்து சாவேன்
சிறுசெயலே மிகக்கொண்டோன் தோணி நாட்டான்
இந்தவொரு சூழ்ச்சியினில் வெற்றி கொண்டான்
எனினும் அவன் வாழ்க்கையினில் வெற்றிகாணுன்

நல்லதுநான் வருகின்றேன் அரசே!" என்று
நடந்திட்டான் தளபதியும் "நன்று, நன்று
செல்க"எனச் சொல்லியுமே, புகைய நெஞ்சு
தீமுகத்தோ டிருந்திட்டான் இளங்கோச் சோழன்
பொல்லாத செயலிதனைப் புகழாய்க் கொண்டு
போக்கினன் ஓலையுமே தோணி நாட்டுக்
கல்லாத மூழூட மன்ன னுக்குக்
காற்ருகத் தூதுவனும் பறந்து விட்டான்

## மாறன் நாடு கடத்தப்பட்டார்

ஒருகுடும்பம் போகிறது நாட்டை விட்டே
உயர்தமிழப் பண்புடனே வாழ்ந்திருந்த
பெருங்குடும்பம் போகிறது பழியை யேற்றும்
பிறன்சொல்லை நம்பியுமே நிலவு போன்ற
திருவிளக்கை அரசனுமே எறிந்து விட்டான்
சிந்தையெலாம் நொந்தவணம் தந்தை யோடு
கரும்பனைய இளைஞனுமே செல்லு கின்றான்
காதல் ஒரு பக்கத்தில் தந்தைஎய்தும்

இன்னல் ஒருபக்கத்தில் என்னே, இந்த
இருநிலத்தில் முடியாட்சி, கொடிய ஆட்சி
முன்னறிவே யில்லாத ஆட்சி தானே!
முகம்புதைத்தே அமுதம் அங்கே அலறுகின்றாள்
என்னசெய்வேன் இனிமேலே? உயிரை விட்டே
இருப்பதெனில் முடியாதே! ஐயோ, அன்பு
தன்னாலே—தமிழாலே—தமிழர் நாட்டில்
தமிழர்க்குத் தீமையெனில் சகிப்ப துண்டோ?

படுக்கையினைக் கண்ணீரால் நனைத்து வெய்யப்
பாலையிலே கிடப்பதுபோல் துடித்துத் தந்தை
கொடுமையினை எண்ணிமனங் கொதித்து மேலும்
கொடுந்தூண்டிற் படும்புழுவாய் வதையலானுள்
கெடுமனத்தன் தோணிநாட்டான் சிரிக்கின்றானே
கீர்த்திமிகும் கோச்சோழன் செங்கோல் மண்ணைத்
தொடுகிறது நீதிக்குப் புறத்தே சென்று
தொல்லுலகைப் பார்க்கவுமே நாணுதையோ!

நாடுவிட்டுக் கடத்துமொரு கொடுமை தன்னை
நாவாலே சொல்லவெனிற் கூடு தில்லை
பாடுபட்ட தொழிலாளர் கூலி தன்னைப்
பறித்தவரை வதைப்பதுவும், ஏழை மக்கள்
தேடுகின்ற செல்வத்தைத் திருடிக் கொண்டு
திண்டாட வைப்பதுவும் கொடுமை! ஆனல்
வீடுவிட்டு வாசல்விட்டுக் கடத்துகின்ற
வெங்கொடுமைக் கீடில்லை அவைகளெல்லாம்

கவிஞனுளங் கொதிக்கிறது கவிதை பொங்கிக்
கண்ணீராய் வழிகிறது கருத் தாழத்தில்
புவிகாணு உணர்ச்சியலைக் கொந்தளித்துப்
புறப்பட்டுத் தவிக்கிறது "வருங்கா லத்தில்
செவிகேட்க நம்பாடல் அரசனுக்குச்
சிறந்தநற் புலவரெலாம் பாடும் போது!
கவிழ்ந்திடுவான் தலைதன்னை மன்னிப் புக்குக்
கைநீட்டி என்முன்னே வருவா னன்றோ?

"எந்தையிடஞ் சென்றவரின் மன்னிப் பிற்கே
இலக்காகு மன்னவனே" என்று நானும்
சிந்தையழி வெய்தியஅச் சோழ னுக்குச்
செவியினிலே அறிவுறுத்திச் சொல்வேன் காதல்
வந்தவிதம் வளர்ந்தவிதம் எடுத்துக் காட்டி
வாழ்க்கையிலே வேண்டுமெனும் உண்மைகூறி
செந்தமிழிற் கவிபாடுந் திறமை பெற்றோர்
செகமன்னர் தம்மைவிட உயர்ந்தோ ரென்பேன்"

எனப்பலவும் எண்ணியுமே அழகன் செல்வான்
எண்ணுகிறான் தோணிநாட்டான் அங்கே! "அந்த
வனப்புடைய காரிகையை—அமுதந் தன்னை
வாய்குளிர முத்தமிடும் நாள் எந்நாளோ!
புனல்விழுந்து குளிக்கின்ற சிறுவர் போலே
போதெல்லாம் அவளுடனே காம ஆற்றில்
தினவெடுத்த உடலூறல் அடங்கக் கட்டிச்
சேர்த்தணைத்துச் சுகம்பெறுதல் எந்தநாளோ

எவ்வாறும் அவளைநான் அடைவேன் மாறன்
எனையங்கே அவமதிப்பாய்ப் பேசி விட்டான்
செவ்வையாய்த் தீர்த்துவிட்டேன் அவனை அந்தச்
சிறுபையன்! அமுதத்தை வசப் படுத்தி
ஒவ்வாத சொற் பேசிவிட்டான் இப்போ
ஓடுகிறான் தந்தையுடன் அமுதம் என்னும்
கொவ்வைப்பழ இதழாள்என் பெருமை கேட்டால்
குடியேறி விடுவாளே தோணி நாட்டில்

"எனக்குப்பெண் வேண்டுமென நானே கேட்டால்
இளஞ்சோழன் "எடுத்துக்கொள்" என்று சொல்வான்
நினைப்பதற்கும் நேரமில்லை நிருபந் தீட்டி
நெடுந்தூதுவன் இடத்தில் கொடுத்தனுப்பி
வினைமுடித்தல் ஒன்றேஎன் வேலை"யென்று
விரைவாக ஓலையிலே எழுதி, ஓடும்
பனைக்காலன் தூதுவன்பால் சேர்ப்பித் திட்டான்,
படைபோலேஅவன்நடந்தான் சோணாட்டிற்கு!

# அவனுக்கா அமுதம்?

சிந்தித்து முடிவுக்கு வந்த சோழன்
தெரிவித்தான் சம்மதத்தை, அமுதந் தன்னை
அந்தவெறிக் காமுகற்குத்—தோணி நாட்டின்
அரசனுக்குக் கொடுத்துவிட எண்ணங் கொண்டான்
எந்தவிதம் இதைஅமுதம் காதால் கேட்பாள்?
இருக்குமோ அவள்ஆவி போமோ! அந்தோ!
மந்தமதி கொண்டவரை மன்னர் என்னல்
மாந்தாதா காலத்து வழக்கமையா!

## வெண்ணெயூரில்

நாட்கள் பல ஓடிற்று வெண்ணெயூரில்
நரைத்ததலைக் கிழவனையும் பொன்னின் சோதி
ஆட்கொண்ட முகத்தினிலே மீசை தாடி
அழகாக வளர்த்துள்ள காளை யையும்
ஆட்கள் பல ருடனிருக்கக் காணு கின்றோம்
அவ்விடத்தே யிருப்போர்கள், துன்புற்றோரை
மீட்கவரும் இயல்பினராய்த் தோன்றுகின்றார்
வேறெவரோ என்றெண்ணி ஏமா றாதீர்

மாறன் அவன் திருமைந்தன் அழகன் ஆங்கே
வைத்திருக்கின்றார் சிறிய பள்ளி யொன்றை
சாறற்ற வாழ்வுக்காய் உழைத்து ழைத்துச்
சாண்வயிறு வளர்ப் பதற்கே நாளெல்லாமும்
ஊறடைந்து கல்வி யினைக் காணாரகி
உளுத்துவிட்ட முதியோர்க்கும் இளையோ ருக்கும்
சோறற்ற ஏழைகட்கும் படிப்பு சொல்லித்
தருகின்ற தொண்டையவர் மேற்கொண் டார்கள்

கல்விபயில் அனைவருக்கும் தான்புனைந்த
கவிதைகளை அழகனுமே கற்றுத் தந்தான்
எல்லோரும் அதைக் கற்றுப் பாடலானார்
இன்னல்செய்த மன்னனையும், நாடுவிட்டே
தொல்லையுறும் நிலைமையையும், காதல், தேச
சுதந்தரத்தின் பெருமையையும் கவிதை யாக்கிச்
சொல்லாலே உயிர்கொடுத்துப் பாட வைத்துத்
தொட்டிழுத்தான் மனிதர்களின் இதயந் தன்னை!

அக்கவிஞன் பாடலெலாம் இவ்வாறாக
அங்கங்கே பரவிற்றுப்! பாடக் கேட்டோர்
மிக்குணர்வு கொண்டார்கள் சோழ நாட்டின்
வீதியிலும் அவன்பாடல் கேட்கக் கண்டு
'திக்'கென்று பற்றியது மன்னனுக்கு!
சிறியவனே எனநினைத்தோம் ஆனால் அன்னோன்
சுக்குநூறாக்குகிறான் மடமை தன்னைச்
சுதந்திரத்தை எழுப்புகிறான் பாடலாலே.

# அரசன் திரும்புகிருன்

வீணேநான் அன்னவனைப் பழித்தேன் உண்மை
வீரர்புகழ்த் தளபதியை ஓட்டி விட்டேன்
தோணிநாட்டான் இவ்வாறு சூழ்ச்சி செய்தான்
துயர்தீர்க்க வந்தஎன் மகனை—அன்பு
மாணிக்கச் சிலைதன்னை, தாயி றந்த
மனத்துயரில் கிடக்கையிலே கொடுத்து விட்டேன்
ஊணின்றி உறக்கமின்றி அமுதம் அங்கே
உருமாறிப் பைத்தியமாய்ப் போய்விட்டாளாம்.

அழுதழுது தொழுதாள் "என் ஆவி போன்ற
அன்புதனைக் காதலினைக் கலைக்க வேண்டாம்
பழுதுவரும்" என்றவளும் பதைத்தாள் அந்தோ
பாவிநான் கேட்காமல் தோணி நாட்டுப்
புழுதியிலே சித்திரத்தைப் புதைத்தேன் அன்னேன்
போரிட்டென் நாட்டினையும் பிடித்துக் கொள்ள
கழுக்குன்ற நாடனுடன் தொடர்பு கொண்டான்
கயவனைநான் நம்பியுமே மோசம் போனேன்.

படைத்தவர் இனியென்னைத் திரும்பிப் பாரார்
பாதகமே செய்தேனே, "என்று கூறி
மடையொழுகும் நீர்போலே கண்ணீர் சிந்தி
மடமையினை உணர்ந்தவனும் கிடந்து சோர்ந்தான்
இடையினிலே அழகன் அங்கே "அமுதந் தன்னை
இனிநானும் காணுமல் வாழேன்" என்று
கடைத்தேறும் மார்க்கத்தைக் காணுதற்குக்
கால்நடையாய் ஊர்சுற்றத் தொடங்கி விட்டான்.

தம்மகனின் நிலையெண்ணி, மாறன் துன்பந்
தாங்காது கதறிடுவார் "ஈன்று விட்டே
அம்மையுமே இறந்திட்டாள் அவளுக்குப் பின்
அப்போதே நானிறந்து போயிருந்தால்
இம்மியுமே நேராது துன்பம்" என்றே
ஏதேதோ எண்ணிடுவார் "சோழ நாட்டான்
விம்மியழும் நாள்வரும்என் நிலையைப் போலே
வீணுகப் பழிசொன்னுன்" என்று சொல்வார்!

## காதலியைத் தேடிக் கவிஞன்

துணிகிழிந்து கந்தலதும் ஆக, வீதித்
தூசியெலாம் மேனியிலே படிய, சோக
அணிபோலே அழகனுமே திரிய லானன்
அப்போதில் அமுதம்அங்கே தோணி நாட்டில்
பிணியுற்றுப் பைத்தியமாய் உள்ளாள் என்று
பேசுகின்ற செய்தியினைக் கேட்டான் அந்த
மணியில்அவன் புறப்பட்டான் தோணி நாடு
மலைக்கப்பால் இருந்தாலும் தாண்டு வானே!

பகலிரவாய் நடந்தஅவன் தோணி நாட்டுப்
பட்டணத்தைப் போயடைந்தான் அந்நே ரத்தில்
புகைப்படலம் சூழ்ந்திருக்கக் கண்டான் யுத்தம்
புரிவதற்குப் படைகளுமே கிளம்பக் கண்டு
திகைப்புற்றான் எப்படியும் அரண் மனைக்குள்
சென்றுவிட வேண்டும் எனும் முடிவினோடு
நகைபொலிய துறவியென ஒதுங்கி நின்று
நடப்பதெலாங் கவனித்தான் கடைக் கண் ணாலே!

வெண்ணெயூர் தனில்வந்து மாறன் பள்ளி
விடுதியினைப் பார்த்துவிட்டுச் சென்ற ஓர்ஆள்
கண்களிலே மகிழ்வேற ஓடி வந்து
"காரியந்தான் என்னஐயா இந்த வூரில்?
மண்புழுதி, உடைகளிலே வந்த தென்ன?
மாபுலவீர் செப்பும்" என வேண்டிக்கேட்க
நண்பா நீ ஒருதவி செய்ய வேண்டும்
நல்லுதவி" என்றழகன் சொல்லி வைத்தான்.

என்னவெனக் கேட்குமுணம், காதில் ஓதி
"இதுமுடியு மா?" என்ருன். "எளிதே ஐயா!
மன்னவனே அப்பெண்ணின் பைத்தியத்தை
மாற்றிவிடும் ஒருவனுக்குக் கேட்கு மட்டும்
பொன்னள்ளித் தருவதுவாய்த் தெரிவித்துள்ளான்
போவிர் இதில் கடினமில்லை" என்ருன் ஓடித்
தன்னையொரு சாதுவென்றும், பைத்தியத்தைத்
தணிக்குமுறை தெரியுமென்று அழகன் சொன்ஞன்.

காவலாகள் இதை அரசனிடத்தே சொன்ஞர்
"கண்காணித் தவனையுமே விடுவீர் உள்ளே
தேவலையாய்ச் செய்துவிடில் செயட்டும் இன்றேல்
செத்தொழிந்து போகட்டும் அவளே; அன்று
மாவிலையின் தளிர்போலே மேனி—இன்று
வாடியதோர் மலர்போலே ஆய் விட்டாளே
ஆகட்டும் பார்க்கலாம் யுத்த வேலை
அதிகம் எனக் கிருக்கிறது—சாதுதன்னை

அரண்மனைக்கே கொடுசெல்வீர் இங்கு வந்தே
அப்படியும் இப்படியும் உளற வேண்டாம்
அரசரெலாம் இங்குவர இருக்கின் றூர்கள்
அகல்வீரே" என்றிட்டான் சென்றூர் ஆட்கள்
முரசொலியும் கேட்கிறது, அழகன் நெஞ்சில்
மூள்கிறது சினத்தீயும்! என்ன செய்வான்?
விரைந்துவந்த ஆட்களுடன் அரண்மனைக்குள்
வெகுதிறமை யுடன் சென்றுன் சாதுவாக.

## அழிவு நிலையில் அமுதம்

அரண்மனையின் உட்புறத்தே—ஒளி யில்லாத
அறைக்குள்ளே அவளொருத்தி! ஓவியத்தைக்
கருக்கலிலே வைத்திருக்கும் உவமை தோன்றிக்
கண்ணீரைக் கிளப்பியது கவிஞனுக்கு!
உருக்கமுடன் பார்த்திட்டான் பின்னர் ஆட்கள்
ஓரிரண்டு நாட்கள்வரை இந்தப் பக்கம்
திரும்புவது கூடாது வந்து பார்த்தால்
சிதறிவிடும் மந்திரந்தான்'' என்று சொன்னான்.

ஒப்பியுமே ஆட்களெலாம் சென்று விட்டார்
உயிர்கொள்ளும் அவதியினைப் பொறுத்து, 'மானே
ஒப்பில்லா என்னருமைக் காதல் வாழ்வே!
உயிர் அமுதம்!' என்றழைத்தே எதிரிற்சென்று
"இப்பிறவி உனக்கென்றே நாளும் வாழும்
எளியோன்உன் காதலனைக் கண்திறந்தே
இப்போது பாராயோ? என்று கண்ணீர்
எழஅவளின் மேனியினைத் தழுவி நின்றான்

அவள்கண்கள் மலர்ந்தன பின் எங்கோசுற்றி
ஏதேதோ நிலையினிலே ஓடி மீண்டு,
"அவன் எங்கே? என்காதல் அமரன் எங்கே?
அழகன் எனும் கவிஞனைநீ கண்டதுண்டா ?
சுவரோரம் பதுங்காதே தோணி நாட்டுச்
சுண்டெலியே!" என்றவளும் சிரித்தாள்; "கண்ணே
எவனைநீ வேண்டினையோ, அவன்நான் தான், உன்
எதிரினிலே இருப்பவனும் அழகன் தானே,"

என்றவனும் அவளிருகைப் பற்றி நின்றான்
"என்னிடத்திற் புளுகாதே கவிஞனென்று;
தென்றல்வர நிலவுவரப் பாட்டுப் பாடு
சிறிதேனுந் தூங்காத காத லிக்குத்
தன்றுணைவன் காட்சியினைக் காட்டுகின்ற
தன்னிழலைக் கற்பனையாய்க் கவிதை யாக்கி
மன்றெல்லாம் அதிசயிக்கப் பாடுபார்ப்போம்
மயிலென்ன நானிங்கே ஆடுகின்றேன்

ஆடுகின்றேன்" எனச் சொல்லிக் கையெடுத்தான்
அழகனவன், கண்ணீரை நிறுத்திக் கொண்டு
வாடுமலர் மேனிக்கு வண்ண மூட்டி
வாழ்வளிக்க விழாப் பாட்டைக் கவிதைதன்னைப்
பாடுகின்றான் திருவாயால் வீணை போலே!
பைந்தொடியாள் அன்றுநடம் செய்ததைப் போல்
நீடுதமிழ்ப் பதமேந்தி ஆடு கின்றாள்
நீணிலத்தில் மீண்டும் அந்தக் கடைசியின்பம்!

இருள்படர்ந்த அறையினிலே ஒளியின் வெள்ளம்!
எப்போதும் பயங்கரமே நிறைந்த வீட்டில்
அருள்வாக்கு! மிருகங்கள் அடிபடர்ந்த
அவ்விடத்தில், புனிதர்களின் தூய்மைக் கோலம்!
துருப்பிடித்த நிலைமாறி மெருகு பெற்றுத்
துலங்குமொரு காட்சியெழப்—பழைய எண்ணம்
திரும்பும்அவள் நெஞ்சினிலே திரைப்படம் போல்!
சிலநொடியில் அமுதம்அவள் அமுத மானாள்!

## காதலனைப் பார்த்தாள்

காதலனை ஆவியுடன் நின்றிருக்கும்
கவிஞனைத்தன் கண்ணெதிரே கண்டாள்! மேனி
வேதனையை மறந்துவிடக் கைகள் ஓடி
விண்குன்றத் தோளானைத் தழுவிக் கொள்ள
"தீதற்ற என்னுயிரே கடைசி முத்தம்!
செல்லரித்துப் போய்விட்ட உடலுக்கின்று
சாதனைகள் அத்தனையும் தந்தீர்! இப்போ
சாகின்றேன் எனினும் இனி உயிர் வாழ்வேனே!"

# அணைந்த விளக்கு

கவிஞனுக்குக் காதலி நான் ஆகையாலே
கடல், விண்மீன், கதிர், மதியம் உள்ளமட்டும்
புவிபோற்ற வாழ்வேன் நான்! என்றன்காதற்
பொன்னரசே! வருகின்றேன்" என்று கூறி
அவிகின்ற விளக்கென்ன அணைந்து போனாள்!
அவ்வுடலை—அமுதத்தை—இதய மென்னும்
தவிசேறி யிருந்திட்ட கவிதை தன்னைத்
தாவியிரு கையாலும் ஏந்திக் கொண்டு.

# உயிரும் உடலும்

தோட்டத்துப் பின்புறமாய்ச் சுவர்க டந்து
தொடுகின்ற ஒற்றையடிப் பாதை யோரம்
ஓட்டமாய் நடைநடந்து கொஞ்ச தூரம்
ஒழிந்தபின், கூண்டுவண்டி ஒன்றைப் பார்த்துக்
கேட்டபணம் தருகின்றேன் என்றுகூறிக்
கிடத்திவிட்டான் அமுதத்தை அதனுள்; தன்மெய்க்
கூட்டையுமே வண்டியினுள் ஏற்று கின்றான்
குந்துகிறான் உயிரின்றி அவள் பக்கத்தில்!

கண்ணீரை அவளுக்குக் கடைசி காலக்
கவிமலராய்ச் சொரிகின்றான்; காதல் கொண்டே
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வாழ்ந்தான்
இடையூறு வருமென்றே எதிர் பார்த்தானா?
புண்ணாகப் போயிற்றே நெஞ்சம்! வண்டி
போகிறது மேடுபள்ளம் கடந்து கொண்டு
மண்மீதில் வாழ்க்கையுமே அவ்வாறே, தான்!
மற்றதனைத் திருத்திடலாம் ஒரு காலத்தில்!

## சோழநாட்டில் யுத்தம்

சோணாட்டில்கோச்சோழன் தனக்கும்,அன்னோன்
சொந்தமென வந்தவொரு நாகத் திற்கும்
வாணாளில் வாய்த்தபெரு நோயைப் போலே
வளர்கிறது பெரும்போரே! "தோணிநாட்டின்
ஓணானை நம்பியுமே தளப திக்கே
ஊறுபல செய்தேனே! இந்த நாட்டார்
நாணாளும் போற்றுகிற கவிக் கோமானை
நஞ்செனவே சொல்லியுமே ஒதுக்கிட் டேனே!

எனக்கின்னும் பலதீமைப் பெருக வேண்டும்
இறுதியிலே என்குடிக்கே கூற்றாய் வந்த
கனமறியாத் தக்கையினைத்—தோணிநாட்டுக்
கயவனையே வீழ்த்திடுவேன் இன்றேல் சாவேன்
வனப்புலிபோல் பாயட்டும் படைகள் நல்ல
வல்லமைச்சர் யாவருமே துணைசெய் வீரே!
இனத்தமிழன் ஆனாலும் துரோகம் எண்ணும்
இவனுயிரை அழிக்காமல் விடவேவேண்டாம்"

இடியென்ன கோச்சோழன் போர்க்களத்தில்
எதிரியின்முன் கொக்கரித்தான் ஆனல், மண்ணும்
பொடிபடவே பெருகிவரும் படைகள், அந்தப்
புறத்தினிலே—எதிர்வகுப்பில் அதிகம்! கண்டு
துடிக்கின்ற நெஞ்சத்தில் ஆத்திரத் தீ
தோய்த்துவிட்டான் என்றாலும் நூறுநூறாய்
மடிகின்ற தன்படைக்குச் சரிசெய் தற்கு
வரும்படைகள் வேறில்லை—சொற்பந் தானே!

## புதிய படை

பகைப்படைகள் பெருகிவந்து நகரைச் சூறைப்
படுத்துகையில் கிளம்பினபார் சோழ நாட்டுக்
குகைப்புலிகள் அதிர்வேட்டுக் கிளப்பிக்கொண்டே!
கொக்கரிப்பு கேட்குதுபார் மாறன் செய்யும்
நகைமுழக்கும், போர்முரச வீரப் பாட்டும்
தொகைத் தொகையாய்த் திரட்டுதுபார் சோணாட்டாரை!
தகதகெனச் சுழல்கின்ற பட்டா வீச்சில்
சரியுதுபார் பகைவர்தலை பனங்காய் போலே!

சோழமண்ணை மிதிக்கவந்த தோணி நாட்டுச்
சுரைக்காயே! கழுத்தெங்கே சீவித் தள்ளி
ஆழத்தில் புதைத்திடுவோம் நரிக்கூட் டத்தை
அடக்கவொரு புலிக்குட்டிப் போதும் என்றால்
வேழம், அத னோடுவரும் வீரச் சிங்கம்
விட்டுவிடு மாசும்மா? இங்கு வந்தே
வாழநினைக் கின்றாயோ? கல்ல றைக்கு
வழிகாட்ட நிற்கின்றோம் வா, வா இங்கே!

மோதிற்றுக் காண்சோழர் வேழக் கூட்டம்
முதுகொடிந்தே அலறுதுகாண் எதிர்ப் பட்டாளம்!
நாதியற்றுப் போயிற்ரு தமிழர் நாடு ?
நாங்களெலாம் உயிர்கொண்டே இருக்கும் இந்தத்
தேதிவரை தமிழ்மண்ணைப் பிறர்கைக் கொள்ள
சிறிதளவும் எண்ணுவரேல் அவர்கள் ஆவி
போதிமரத் தடியினிலே ஞானந் துய்க்கப்
போகுமெனச் சொல்லுகிரேும் வந்து பாரீர்

## மாறன் மாண்டான்

திமுதிமெனப் படைவந்து புற்றீசல் போல்
திசைதோறும் பெருகுவதை எதிரி கண்டான்
எமன்போன்று மாறன் அதோ எதிரில் வந்தான்
"என்ன இது விந்தை!" யெனத் தோணிநாட்டான்
அமைதியின்றி ஓட்டமிட எத்தனித்தான்!
அந்நேரம் அவன் துணைவன் பதுங்கி நின்றே
இமைப்போதில் மாறன்மேல் அம்பை எய்தி
இன்னுயிரைக் குடித்திட்டான் மன்னன் அப்போ,

## சோழன் உண்மை கண்டு உணர்ந்தான்

அப்பக்கம் தேரேறி வந்தான் ஆ! ஆ!
அங்கேதான் மாறன்விழக் கண்ணால் கண்டான்!
"சுப்பல்எனச் சிதறியஎன் போர ணிக்குத்
துணிவுதந்து விட்டவனும் நீயா? இங்கே
எப்படிநீ எப்போது வந்தாய்? நாட்டில்
எல்லோரும் வீரர்களாய் ஆன துன்றன்
ஒப்பில்லாத் திறமையெனில் உனை நிந்தித்த
ஒருமூடன் நானிங்கே உயிர்வாழ் கின்றேன்

கடைசிநாள் மன்னிக்க வேண்டு கின்றேன்
கவியழகன் எங்கேயோ?" என்ற ரற்றும்
அடல்வேந்தன் தனைநோக்கி, "மன்ன! இந்த
அற்புதஞ்சேர் வெற்றியினைத் தேடித் தந்தோன்
படைத்தலைவன் எனும் நானும்அல்ல! இந்தப்
பார்போற்றும் இளங்கவிஞன் அழகன் தந்த
படைப்பாட்டே மக்களுக்கு வீரம் ஊட்டிப்
பகைவர்தமைப் புறங்காட்டச் செய்த தென்பேன்!

அவன்உமது குலக்கொடியைத் தேடி யெங்கோ
அலைகின்றான் என்வாழ்வும் இறுதி யாச்சு!
தவமிருந்து பெற்றபிள்ளை யிரண்டும் இந்தத்
தாரணியில் அவர்கள்கதி இவ்வா றாச்சு
சவமாகப் போகின்றேன்—அழக னுக்குத்
தமிழ் நாட்டின் வரலாறு தலைவ ணங்கும்!
கவலையினை நீக்கும் அந்தக் காட்சியொன்றே,
காணீர்எனச் சொல்லியுமே மாறன் மாண்டான்!

## தோணி நாட்டுப் படை வீழ்ந்தது

மாறனுமே இறந்தவுடன் சோழ நாட்டு
மாப்படைகள், பகைவர்தமை சாவின் உச்சி
ஏறவைத்து வேடிக்கைப் பார்த்த தாலே
இரண்டாகப் பிளந்தோடிப் பல துண்டாகி
நூறுசுக்கல், ஆயிரமாய்க் கோடி யாகி
நொடிக்குள்ளே பொடிபொடியாய்ச் சிதறி வீழ்ந்து
மாறாத அமைதியிலே தோணி நாட்டு
மகிமைமிகும் படையெல்லாம் சேர்ந்த தாமே!

## காதலர் காட்சி தந்தனர்

அந்நேரம் கோச்சோழன் கண்முன், அந்த
அழகன் அவன் உயிர்க்காதல் அமுதம்—ஓடைச்
செந்நீரில் துலங்குகிற ஓவி யம்போல்
சேர்ந்தொன்றாய்க் காட்சியினைத் தந்தார்! "காணல்
'எந்நாளோ என்றிருந்தேன்' என்றே
இளங்கோவன் இருவரையும் தழுவ, ஓடி இன்னும்
மூந்நூறு ஆண்டுகள்நீர் தவஞ் செய்தாலும்
முகங்காட்ட மாட்டாளே அமுதம் என்று

## கவிஞன் புகழ் உலகு சென்றான்

கோவென்று கதறினான் அழகன் "நானே
கொலைகாரன்" என்றிளங்கோ அலறிவீழ்ந்தான்
ஓவென்று கூவாதே! கடைசி நாளில்
ஒன்றிரண்டு சொற்கள்தமைக் கேட்பாய் கொல்லும்
சாவுதனை விலக்கும் என்றன் அமுதம் சென்று
சயனிக்கும் சமாதியின்மேல் தெளிவாய் என்றன்
நாவுதழுவிக் கிடக்கும் கவிதை தன்னை
நன்கமையப் பொறித்திடுக! என்றன் மார்பில்

வழியினிலே பகைவரம்பு பாய்ந்ததாலே
வழிகிறது செங்குருதி! இதனை அள்ளி
மொழிஅமுதம் நெற்றியிலே இடுகின்றேன் என்
முதல்மணமே இதுதானே! காணீர்" என்று
பொழில்அழவும், பறவையெலாம் அழவும், தேமாம்
பூவழவும், தமிழ்மக்கள் அழவும், அன்னான்
விழிமூடி விட்டானே!—அந்தோ—சோழன்
"விதியில்லை; ஈதென்றன் சதி" என்றானே!

## கதை முடிந்தது

காதலனின் கண்ணீர்ளன் றெழுதி வைத்த
கவிதையின்னும் ஓலையொன்றை அழகன் கைகள்
சாதல்முன் சமர்ப்பித்த காட்சி யார்க்கும்
தாங்காதத் துயரத்தை அளிக்கும் அம்மா!
"சோதனையோ" என்றலறி இளங்கோச் சோழன்
சொற்கோவின் கவிதையினைக் கண்ணில் ஒற்றி
நீதந்த பணிமுடித்துச் சாவேன் வீர
நெடுமாறன் தன்மகனே! கவிக் கோமானே!

என்மகளின் இன்னுயிரே! அமுதம் உன்ன
எண்ணியென்றன் செயலாலே அழிந்து போன
தென்னாட்டுச் சீமானே! வணங்கு கின்றேன்
திசையெட்டும் உம்காதல் புகழைப் பாடிப்
பொன்னேட்டில் எழுதிவைத்துப் போற்றும் இந்தப்
புல்லன்எனைத் தூற்றும்! எனில் அதனை யேற்றும்
நின்பணியை முடித்திடுவேன்! அமுதத் தோடு
நீசென்று வாழ்க!" எனத் தொழுதிட்டானே.

1192.
03111
UNIVERSITY EXTENSION LIBRARY
16 DEC 1957
UNIVERSITY EXTENSION LIBRARY, MADURAI
MADURAI

முற்றும்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS



Univ. Grants Commission